# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,877/5 — 1969 ඔක්තෝබර් 28 වැනි අඟහරුවාද — 1969.10.28

14,877/5 ம் இலக்கம்—1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ச. வ. பீ 73/52.**

நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(423 ஆம் அத்தியாயமான) நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி அமைச்சர், உக்கு பண்டா வன்னிநாயக்க ஆகிய நான்—

(1) 1953 ஒற்றோபர் மாதம் 2 ஆந் தேதியின் 10,593 ஆம் இல. கசெற்றில் வெளியிடப்பட்ட சொல்லப்பட்ட பிரிவின் கீழுள்ள அதிகாரத்தினை, அதனகத்துள்ள 1 ஆம் அட்டவணையில் கொழும்பு ஈஸ்ரேண் வங்கி லிமிரெட் தொடர்பான விடயத்தை விட்டுவிடுவதன் மூலம், 1969, நவம்பர் மாதம் 1 ஆந் தேதியிலிருந்து பயனுடையதாகும் வண்ணம் இத்தால் திருத்துகின்றேன் ; அத்துடன்,

(2) பிறநாட்டு நாணயமாற்றைப் பாதுகாக்கும் பொருட்டும் சொல்லப்பட்ட சட்டத்தின் நெறிகளைப் பயன்படச் செய்வதற்குமாக, நாணயமாற்றுக் கட்டுப்பாட்டாளர் எழுத்து மூலங் கொடுக்கும் அத்தகைய பணிப்புக்களுக்கிணங்கச் சொல்லப்பட்ட வங்கி தனது அலுவல்களை நடாத்துதல் வேண்டுமென்னும் நிபந்தனைக்கமைவாக, 1969, நவம்பர் மாதம் 1 ஆந் தேதியிலிருந்து பயனுடையதாகும் வண்ணம் பிறநாட்டு நாணயங்கள்யாவும் சம்பந்தமாக அதிகாரம் பெற்ற வணிகராகச் சொல்லப்பட்ட சட்டத்தின் பொருட்டுச் செயலாற்றுவதற்கு இலங்கை கொமேசல் வங்கி லிமிரேட் என்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

யு. பி. வன்னிநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1969 ஒற்றோபர் மாதம் 27 ஆந் தேதி.
**10—1046.**


இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.